1978 செப்டம்பர் 14]

பெரியகுளம் பேருந்து நிலையம்.

*வினா எண். 212—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் நகரத்திலுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தனியார் நிலங்களை வாங்க ரூ. 2·6 இலட்சம் கடன் கோரி நகராட்சி தனி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பின் மேல் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்றபின் விரிவான திட்ட மதிப்பீடுகளுடன் கடன் விண்ணப்பத்தை புதுப்பிக்குமாறு அரசு, நகராட்சி தனி அலுவலரைக் கேட்டுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு கமிஷனரும் ஒவ்வொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த பஸ் நிலையத்தை அவர்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்ளலாம் என்று திட்டம் தீட்டிக் கொள்ளுகிறார்கள். எந்த இடத்தில் அந்த பஸ் நிலையத்தைக் கட்ட அரசு சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 22–6–1978-லே நமது வீட்டுவசதி அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்து அதைப் பற்றிய வரைபடத்தை அனுப்பச் சொல்லி தனி அதிகாரியைக் கேட்டார்கள். அந்த வரைபடமும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை ஒட்டி அரசு அதை அணுகும்.

திருவண்ணாமலை பேருந்து நிலையம்.

*வினா எண். 213—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேலை துவங்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) வேலை துவக்கப்படவில்லை.

(ஆ) & (இ). கேள்விக்கு இடமில்லை.

(இ) நகராட்சிப் பிரயாணிகள் தங்கும் விடுதிக்கு அருகிலுள்ள நகராட்சி இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்கு அரசு அனுமதியளித்துள்ளது. ஆணையரிடமிருந்து நிர்வாக ஒப்புதலுக்கான பிரேரணைகள் வந்ததும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிடத்திலே பஸ் நிலையத்தை மாற்றுவதற்குண்டான வேலைகள் செய்யப்பட்டு முடிவு பெறாமல் நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே, திருவண்ணாமலையில் 7 இடங்களில் பஸ் உரிமையாளர்கள், பஸ்களை நிறுத்தி பொதுமக்களை ஏற்றிச் செல்கிறார்கள். அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த வசதிக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே அதை ஒரே இடமாக இருக்குமாறு ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வகையிலே போளூர் சாலையிலே, திருவண்ணாமலை நகராட்சிப் பயணியர் விடுதிக்குப் பக்கத்திலே உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

அரிசனக் குடியிருப்புகளுக்குச் சொத்து வரி.

*வினா எண். 214—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்கு அரசு கட்டிக் கொடுக்கும் குடியிருப்புகளுக்கு வீட்டு வரி ரூபாய் பத்து விதிக்க ஊராட்சிகளுக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆம். இது ஒரு ஆண்டுக்கு.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, இதிலே பிராபர்டி டாக்ஸ் என்று இருக்கிறது. இப்போது புதிதாக அரசால் கட்டிக் கொடுக்கக்கூடிய காலனிகள், வீடுகளுக்கு வரி 10 ரூபாய் அதிகமாக்க வேண்டும் என்று அரசு செயல் குறிப்பில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த வீடுகளில் குடியேறுவதற்கு முன்னாலே கூரை வீடுகளில்தான் வசித்து வந்தார்கள். அவர்கள் கூரை வீடுகளில் இருக்கும்போது கட்டிய வரியையே இந்த வீடுகளுக்கும் கட்டுவதற்கு அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.